**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | STC.181/2026 |
| Prosecution Witness | : | PW2 |

26.05.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : இ.சத்திய விநாயகம் | Calling | : | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father Name | : இளம்பருதி | | : | |
| Village | : தொட்டியம் | Age | : | 52 |
| Taluk | : தொட்டியம் | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் உப்பிலியபுரம் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் பிரகாஷ் அவர்களின் கையொப்பம் நன்கு பரிச்சையம் என்பதால் பெற்றதாலும் வழக்கின் தரப்பினர்கள் சமாதானம் ஆகிவிட்டதாலும் ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.11.2023 ம் தேதி உதவி ஆய்வாளர் பிரகாஷ் என்பவர் நிலையத்தில் இருந்த போது லோகநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய மனு எண்,1926/2023 வழங்கி விசாரணை பின்பு நிலைய குற்ற எண். 373/2023 சட்டப்பிரிவுகள் 294(b),323,506(1)ன் கீழ் 19.30 மணிக்கு வழக்கினை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் மனுவானது அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 29.11.2023 தேதி காலை 8.00 மணியளவில் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பத்மநாதன் ராமராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம்

மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகளான 1 முதல் 5 வரை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். அவரது விசாரணையில் சம்பவம் உண்மை என்று தெரிந்து எதிரிகளை தேடிவந்த நிலையில் இவ்வழக்கின் எதிரியான ரவி என்பவரை கடந்த 29.11.2023ம் தேதி 17.50 மணியளவில் உப்புலியபுரம் காவல் நிலையத்தில் ஆஜரானவரை குற்ற காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்துள்ளார். எனது சாட்சிகளின் விசாரணையிலிருந்து இவ்வழக்கின் எதிரி ரவியின் மனைவி, மகன் மற்றும் மகள் ஆகியோர் வழக்கு சம்பவத்தில் இல்லை என்று தெரிய வந்ததால் அவர்களை இவ்வழக்கிலிருந்து நீக்கி எதிரிகள் நிக்கல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு அவரது வழக்கு விசாரணை முடித்து எதிரியின் மீதான குற்றத்திற்கு போதிய ஆதரம் இருந்ததால் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றும், ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் புகார்தாரரிடமிருந்து பொய்யான புகாரை பெற்று புகார்தாரரின் உறவினர்களை கொண்டு இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளும், ஆவணங்களும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சொன்ன நேரம் மற்றும் இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற

இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சொன்ன நேரம் மற்றும் இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

ஒப்பம்/–R.சுரேஷ் குமார்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.